**செய்தி வெளியீடு எண்: 792** **நாள்: 31.10.2018**

**செய்தி வெளியீடு**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் இன்று (31.10.2018) தலைமைச் செயலகத்தில், உள்துறை சார்பில் திருநெல்வேலி மாவட்டம், சேரன்மகாதேவியில் 3 கோடியே 33 லட்சத்து 85 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள 26 காவலர் குடியிருப்புகளை காணொலிக் காட்சி (Video Conferencing) மூலமாகத் திறந்து வைத்தார்கள். மேலும், 34 கோடியே 89 லட்சத்து 96 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள 148 காவலர் குடியிருப்புகள், 2 காவல் நிலையங்கள், 2 காவல் துறை கட்டடங்கள், 34 தீயணைப்பு மற்றும் மீட்புப்பணிகள் துறையினருக்கான குடியிருப்புகள் மற்றும் 2 தீயணைப்பு மற்றும் மீட்புப்பணிகள் நிலையக் கட்டடங்கள் ஆகியவற்றை திறந்து வைத்தார்கள்.

மாநிலத்தின் அமைதியைப் பேணிப் பாதுகாப்பது, சட்டம் ஒழுங்கைப் பராமரிப்பது, குற்றங்கள் நிகழாமல் தடுப்பது, குற்றவாளிகளைக் கண்டுபிடித்து தக்க தண்டனை பெற்றுக் கொடுப்பது போன்ற பல்வேறு முக்கிய பணிகளை காவல்துறை ஆற்றி வருகின்றது. இத்தகைய முக்கியத்துவம் வாய்ந்த காவல்துறையின் பணிகள் மேலும் சிறக்க, புதிய காவல் நிலையங்கள் மற்றும் காவலர் குடியிருப்புகளைக் கட்டுதல், காவல்துறையின் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல் போன்ற பல்வேறு திட்டங்களை மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் வழியில் செயல்படும் தமிழ்நாடு அரசு செயல்படுத்தி வருகிறது.

அந்த வகையில், திருநெல்வேலி மாவட்டம், சேரன்மகாதேவியில் 3 கோடியே 33 லட்சத்து 85 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள 26 காவலர் குடியிருப்புகளை காணொலிக் காட்சி மூலமாக மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் திறந்து வைத்தார்கள். இக்காவலர் குடியிருப்புகள் தரை மற்றும் இரண்டு தளங்களுடன், ஒவ்வொரு வீடும் தலா 650 சதுர அடி பரப்பளவில் கட்டப்பட்டுள்ளது.

மேலும், அரியலூர் மாவட்டம் – தேளூரில் 15 குடியிருப்புகள், தூத்துக்குடி மாவட்டம் – காடல்குடி மற்றும் தட்டார்மடத்தில் 56 குடியிருப்புகள், தஞ்சாவூர் மாவட்டம் – ஒரத்தநாட்டில் 34 குடியிருப்புகள், தஞ்சாவூர் ரெயில்வே காவலர்களுக்கான 43 குடியிருப்புகள், என மொத்தம் 17 கோடியே 94 லட்சத்து 73 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள 148 காவலர் குடியிருப்புகள்;

சென்னை மாநகர் – வேளச்சேரி மற்றும் திருச்சிராப்பள்ளி மாநகர் – அரியமங்கலம் ஆகிய இடங்களில் 1 கோடியே 60 லட்சத்து 34 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள 2 காவல் நிலையங்கள்;

ஈரோடு மாவட்டம் – சத்தியமங்கலம் சிறப்பு இலக்குப்படைக்கான காவல் மோப்ப நாய் பிரிவுக் கட்டடம் மற்றும் சத்தியமங்கலம் சிறப்பு இலக்குப்படைக்கான கட்டடம் என மொத்தம் 9 கோடியே 63 லட்சத்து 78 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள 2 காவல் துறை கட்டடங்கள்;

கரூர் மாவட்டம் – புகளூரில் 17 குடியிருப்புகள் மற்றும் புதுக்கோட்டை மாவட்டம் – ஆலங்குடியில் 17 குடியிருப்புகள் என மொத்தம் 4 கோடியே 42 லட்சத்து 29 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள தீயணைப்பு மற்றும் மீட்புப்பணிகள் துறை பணியாளர் குடியிருப்புகள்;

கிருஷ்ணகிரி மாவட்டம் – பர்கூர் மற்றும் வேலூர் மாவட்டம் – பேர்ணாம்பட்டு ஆகிய இடங்களில் 1 கோடியே 28 லட்சத்து 82 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள 2 தீயணைப்பு மற்றும் மீட்புப்பணி நிலையங்கள்;

என மொத்தம், 38 கோடியே 23 லட்சத்து 81 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள காவல் துறை, தீயணைப்பு மற்றும் மீட்புப்பணிகள் துறை கட்டடங்களை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் இன்று திறந்து வைத்தார்கள்.

இந்த நிகழ்ச்சியில், மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அமைச்சர் திருமதி வி.எம். ராஜலட்சுமி, தலைமைச் செயலாளர் முனைவர் கிரிஜா வைத்தியநாதன், இ.ஆ.ப., உள், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் டாக்டர் நிரஞ்சன் மார்டி, இ.ஆ.ப., காவல்துறை தலைமை இயக்குநர் திரு. டி.கே. ராஜேந்திரன், இ.கா.ப., தீயணைப்பு மற்றும் மீட்புப்பணிகள் துறை இயக்குநர் திரு.கே.பி. மகேந்திரன், இ.கா.ப., சென்னை பெருநகர காவல்துறை ஆணையர் முனைவர் அ.கா. விஸ்வநாதன், இ.கா.ப., தமிழ்நாடு காவலர் வீட்டுவசதி கழக தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர் திரு. ம.நா. மஞ்சுநாதா, இ.கா.ப., மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

* * * * *

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**